بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 05/07/2024 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

- ☆ **பத்ருல் மவ்யித் மற்றும் தூமத்துல் ஐந்தல் ஆகிய படையெடுப்புகளின் சூழ்நிலைகள், சம்பவங்கள் பற்றிய குறிப்பு**
- ☆ **உலக அமைதிக்காக துஆவுக்கான கவனமூட்டல்**
- ☆ **முஸ்லிம்கள் தாம் எஞ்சி இருப்பதற்கு ஒன்றுபடுமாறு வலியுறுத்தல்**

أَشۡهَدُ أَنۡ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۳﴾ مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعۡبُدُ وَإِيَّاكَ نَسۡتَعِيۡنُ ﴿۵﴾ اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيۡنَ أَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ ﴿۷﴾

**இன்று இரு படையெடுப்புகளைப் பற்றி எடுத்துக் கூறுவேன். முதல் படையெடுப்பின் பெயர் பத்ருல் மவ்யித் ஆகும்.** இது ஹிஜ்ரி 4 ஆண்டு நிகழ்ந்ததாகும். இந்த படையெடுப்பு பத்ருஸ் ஸானியா, பத்ருல் ஆகிரா மற்றும் பத்ருஸ் ஸுஃக்ரா என்ற பெயர்களாலும் அறியப்படுகிறது. பெருமானார் (ஸல்) அவர்கள் ஷஃஅபான் மாதம் ஹிஜ்ரி 4 ஆண்டில் பத்ரை நோக்கி புறப்பட்டார்கள். சில வரலாற்றாசிரியர்கள் (இந்த படையெடுப்பு நிகழ்ந்த) மாதத்தைப் பொறுத்தவரை கருத்து வேறுபாடு கொண்டுள்ளார்கள்.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹிஜ்ரி 4 ஆண்டில் ஷவ்வால் மாதத்தின் இறுதியில் பெருமானார் (ஸல்) அவர்கள் 1500 சஹாபிகளைக் கொண்ட படையை அழைத்துக் கொண்டு மதீனாவில் இருந்து புறப்பட்டார்கள்.

இந்த படையெடுப்புக்கான காரணம் என்னவென்றால் அபூ சுஃப்யான் பின் ஹர்ப் அவர்கள் உஹுது போரில் இருந்து திரும்பிச் செல்லும் போது, அடுத்த வருடம் நம்முடைய சந்திப்பு பத்ருஸ் ஸஃப்ராவில் இருக்கும்; நாம் அங்கு போரிடலாம் என்று உரத்த குரலில் கூறியிருந்தார். பத்ர், பத்ருஸ் ஸஃப்ரா என்றும் அழைக்கப்பட்டது. பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம், சரி! இன்ஷா அல்லாஹ் என்று பதிலளிக்குமாறு கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்களே இன்ஷா அல்லாஹ் என்று பதிலளித்ததாகவும் ஓர் அறிவிப்பில் வருகிறது.

பத்ர் என்பது மக்கா மற்றும் மதீனாவுக்கு இடையில் உள்ள ஒரு பிரபல்யமான கிணறு ஆகும். இது மதீனாவின் தென்மேற்கு பகுதியில் 150 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. அறியாமைக் காலத்தில் இந்த இடத்தில் ஒவ்வொரு வருடமும் ஸுல்கஅதா மாதத்தின் 1 ஆம் தேதி முதல் 8 ஆம் தேதி வரை ஒரு மிகப்பெரும் சந்தை கூடி வந்தது. அபூ சுஃப்யான் அவர்களோ ஆணவத்தில் இந்த அறிவிப்பை செய்து விட்டார்தான்! ஆனால் வாக்குறுதியுடைய நேரம் நெருங்கி வந்தபோது போரை எதிர்கொள்வதை அவர் தவிர்க்க ஆரம்பித்தார். ஆனால், அவர் மிகப் பெரும் படையுடன் வந்து மதீனா மீது தாக்குதல் நடத்துவதற்கு ஆயத்தங்களை மேற்கொண்டிருப்பதாக

காட்டிக் கொண்டிருந்தார். இதற்காக நுஅய்ம் என்ற ஒருவருக்கு 20 ஒட்டகங்கள் பரிசு தருவதாக பேராசையூட்டி மதீனாவுக்கும் அனுப்பி வைத்திருந்தார். அந்த நபர் அபூ சுஃப்யான் அவர்களின் போர் ஆயத்தங்களைக் குறித்து முஸ்லிம்களிடம் மிகைப்படுத்தி கூறி அவர்களை போருக்கு செல்லாமல் தடுக்க முயற்சித்தார்.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** உஹுது வெற்றி கிடைத்திருந்தபோதிலும், இவ்வளவு பெரிய படை உடன் இருந்த போதிலும் அபூ சுஃப்யான் பின் ஹர்ப் அவர்களின் உள்ளம் அஞ்சிக் கொண்டிருந்தது. இஸ்லாத்தின் அழிவுக்காக முயற்சி செய்து கொண்டிருந்த போதிலும், மிகப்பெரிய படையை ஆயத்தம் செய்யாத வரை முஸ்லிம்களை எதிர்கொள்ள வேண்டாம் என்று அவர் நினைத்துக் கொண்டிருந்தார். எவ்வாறிருப்பினும், பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அபூ சுஃப்யான் அவர்களுடைய படை ஆயத்தங்களைக் குறித்து செய்தி கிடைத்தபோது ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) பின் அப்துல்லாஹ் பின் உபய் பின் சலூல் என்ற கலப்பற்ற, தியாகமிக்க, உறுதியான ஒரு முஸ்லிமை மதீனாவில் தமக்கு பின்னால் அமீராக நியமித்தார்கள். இவர் முனாஃபிக்களின் தலைவனான அப்துல்லாஹ் பின் உபய் உடைய மகன் ஆவார். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்களை அமீராக நியமித்ததாக இன்னோர் அறிவிப்பில் காணப்படுகிறது. பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் தம் கொடியை ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் கொடுத்தார்கள். முஸ்லிம்கள் தம் வியாபார பொருட்களுடன் பத்ர் ஐ நோக்கி புறப்பட்டார்கள். முஸ்லிம்களோ அபூ சுஃப்யான் அவர்களுடன் போரிடுவதற்காக சென்றிருந்தார்கள். ஆனால் அவர்கள் வியாபார பொருட்களை உடன் எடுத்துச் சென்றது அவர்களின் திடம், துணிவு, நம்பிக்கை ஆகியவற்றை பறைசாற்றுகின்றது. ஒன்று, அபூ சுஃப்யான் போருக்கு வரவே மாட்டார். அப்படி வந்துவிட்டாலும் மிக மோசமாக தோல்வியடைந்து ஓடி விடுவார். அந்த நாட்களில் அங்கு சந்தையும் ஒன்று கூடும்; முஸ்லிம்கள் வியாபாரம் செய்து பயனடையலாம் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் வழிகாட்டியிருக்கவும் வாய்ப்புள்ளது! அதனடிப்படையில் அவர்கள் வியாபார பொருட்களை எடுத்துக்கொண்டு சென்றிருக்கலாம். பிறகு உண்மையிலேயே அவ்வாறுதான் நிகழ்ந்தது!

முஸ்லிம்கள் வாக்குறுதிக்கேற்ப பத்ர் மைதானத்திற்கு வந்து சேர்ந்தார்கள். ஆனால், இன்னொரு பக்கமோ அபூ சுஃப்யான் அவர்கள் குரைஷிய தலைவர்களிடம், நாம் நுஅய்மை அனுப்பியுள்ளோம். முஸ்லிம்கள் புறப்படுவதற்கு முன்பே அவர் அவர்களை துணிவிழக்கச் செய்து விடுவார். அவர் மிகவும் முயற்சி செய்து வருகிறார். ஆயினும், நாம் ஓரிரு இரவுகளுக்காக புறப்பட்டுச் செல்வோம்; பிறகு நாம் திரும்பி வந்து விடுவோம். முஸ்லிம்கள் போருக்காக புறப்படவில்லை என்றால், ‘நாங்களோ சென்றிருந்தோம்; ஆனால் முஸ்லிம்கள் வரவில்லை’ என்று நாம் மிக எளிதாக கூறி விடுவோம். இவ்வாறு நாம் வெற்றியாளர்களாக ஆகிவிடுவோம். ஆனால் முஸ்லிம்கள் போருக்காக புறப்பட்டு வந்து விட்டார்கள் என்றாலும், ‘இவ்வருடம் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. போருக்கு செழிப்பான வருடம் பொருத்தமானது’ என்று கூறி நாம் திரும்பி விடுவோம் என்று கூறினார்.

குறைஷியர்கள் அபூ சுஃப்யான் உடைய ஆலோசனையை விரும்பினார்கள். ஆகவே அவருடைய தலைமையில் 2000 பேரைக்கொண்ட படை புறப்பட்டது. மக்காவிலிருந்து 22 கிலோமீட்டர் தூரத்தை கடந்த பிறகு அபூ சுஃப்யான் மற்றும் அவருடைய படை துணிவிழந்து விட்டது. முஸ்லிம்களுடன் போர் செய்ய அவர்களுக்கு தைரியம் இருக்கவில்லை. இறுதியில் அபூ சுஃப்யான் தம் படையினரிடம் திரும்பிச் செல்லுமாறு அறிவிப்பு செய்தவாறு, ‘குரைஷிய மக்களே! வளமிக்க பசுமையான வருடம்தான் போருக்கு உங்களுக்கு சிறந்ததாகும்! இப்போது பஞ்ச காலமாக இருக்கிறது. ஆகவே நான் திரும்பிச் செல்கிறேன்; நீங்களும் திரும்பிச் செல்லுங்கள்’ என்று கூறினார். அபூ சுஃப்யான் அவர்களின் இந்த தீர்ப்புக்குப் பிறகு முழு படையும் திரும்பிச் சென்று

விட்டது. எந்த ஒரு நபரும் இந்த தீர்ப்பை மறுக்கவில்லை. முழு படையிலும் முஸ்லிம்களின் திகில் பரவி இருந்தது என்பது இதிலிருந்து தெரிய வருகிறது.

பெருமானார் (ஸல்) அவர்கள் பத்ரில் 8 நாட்கள் வரை காத்திருந்து தங்கி இருந்த பிறகு மதீனா திரும்பி வந்தார்கள். இஸ்லாமிய படை மொத்தம் 16 இரவுகள் மதீனாவை விட்டு வெளியே இருந்தது. முன்னால் வருவதற்கு எதிராளிக்கு தைரியம் இருக்கவில்லை. இதனால் எதிரிக்கு பெருத்த அவமானமாகப் போய்விட்டது. (அத்துடன்) முஸ்லிம்களின் துணிவு(ம்) மேலோங்கியது. அந்தப் பகுதியைச் சார்ந்த சில உள்ளூர் காஃபிர்கள் மக்கத்து குரைஷியர்களின் பக்கம் சாய்ந்திருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் மிகவும் வீரத்துடன் அவர்கள் மீது தம் மன உறுதியை தெளிவாக்கி விட்டார்கள். அவர்களும் அஞ்சி ஒடுங்கி விட்டார்கள். பத்ரைச் சார்ந்த சில வியாபாரிகள் வியாபாரத்தை முடித்துக் கொண்டு மக்காவுக்கு சென்றிருந்தார்கள். அவர்கள் அபூ சுஃப்யான் அவர்களிடம் முஸ்லிம்களுடைய உறுதியான நிலைபாட்டைக் குறித்து தகவல் கூறினார்கள். தம் கோழைத்தனம், வாக்கு மீறியது ஆகியவற்றின் காரணமாக அபூ சுஃப்யான் மற்றும் அவருடைய தோழர்களுக்கு மிகவும் தலை குனிவு ஏற்பட்டிருந்தது.

**இரண்டாவது படையெடுப்பு தூமத்துல் ஜந்தல் என்பதாகும்.** இது ஹிஜ்ரி 5 ஆம் ஆண்டு ரபீவுல் அவ்வல் 25 ஆம் நாளில் நிகழ்ந்தது. இது மதீனாவில் இருந்து ஏறக்குறைய 450 கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் இடமாகும். பழங்காலத்தில் ஏறக்குறைய 15 முதல் 17 நாட்களைக் கொண்ட பயணமாக இது இருந்தது. இப்பகுதியில் பல வியாபார சந்தைகள் கூடி வந்தன. அப்போது வரை எதிரிகளுடன் நடைபெற்ற அனைத்து போர் நடவடிக்கைகளும் மதீனா மற்றும் ஹிஜாஸ் பகுதியை சுற்றி மட்டுமே நிகழ்ந்திருந்தது. மதீனாவில் இருந்து தொலைவில் ரோமாபுரி ஆட்சி அமையப்பெற்ற சிரியா பகுதியின் எல்லைக்கருகில் இந்த போர் நடவடிக்கை இருந்தது. இதற்கான பின்னணி என்னவென்றால், முஸ்லிம்களிடமிருந்து தொடர்ச்சியாக தோல்வி அடைதல் மற்றும் முஸ்லிம்களின் அதிகரிக்கும் தாக்கம் ஆகியவற்றைக் கண்டு மார்க்கத்தின் எதிரிகள் இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களை வேரோடு அழிப்பதற்கான வாய்ப்பைத் தேடிக் கொண்டிருந்தார்கள். இதை செயல்படுத்துவதற்காக மதீனாவில் இருந்து முற்றிலும் வடதிசையில் இருந்த சிரியாவின் எல்லைப் பகுதியில் தூமத்துல் ஜந்தலைச் சுற்றியிருந்த கோத்திரங்கள் இஸ்லாமிய ஆட்சிக்கு சவால் விடுக்கும் வண்ணம் ஒரு பெரிய படையை ஒன்று திரட்ட ஆரம்பித்தன.

இம்மக்கள் குழப்பங்களை விளைவித்தும், வியாபாரக் குழுக்களை கொள்ளையடித்தும் வந்தனர். ஏதாவது ஒரு முஸ்லிம் அவர்களின் கைகளில் சிக்கினால் அவருக்கு துன்பம் கொடுத்தும் வந்தனர். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு தூமத்துல் ஜந்தலுடைய இக்கோத்திரங்களின் அனைத்து நடவடிக்கைகளைக் குறித்தும் தகவல் தெரிவிக்கப்பட்டபோது, தூமத்துல் ஜந்தலைச் சார்ந்த இக்கோத்திரங்கள் ஏதேனும் பெரிய படையை ஒன்று திரட்டி மதீனா மீது தாக்குதல் தொடுப்பதற்கு முன்பாக அந்தப் பகுதியை அடைந்து அவர்கள் மதீனாவின் மீது படையெடுப்பு செய்வதை விட்டு விலகும் வகையில் அவர்களை சிதறடித்து விட வேண்டும் என்றும், வியாபார குழுக்கள் பாதுகாப்புடன் சிரியா சென்றடைய (ஏற்பாடு செய்ய) வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

பெருமானார் (ஸல்) அவர்கள் புறப்படுமாறு மக்களுக்கு கட்டளையிட்டார்கள். அன்னார் ஓராயிரம் சஹாபா பெருமக்களின் படையை அழைத்துக் கொண்டு புறப்பட்டார்கள். அன்னார் இரவில் பயணம் செய்வார்கள்; பகல் முழுவதும் மறைந்திருப்பார்கள்.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** பெருமானார் (ஸல்) அவர்கள் 15, 16 நாட்கள் நீண்ட சிரமமிக்க பயணத்தை மேற்கொண்ட பிறகு தூமத்துல் ஜந்தலை சென்றடைந்தார்கள். ஆனால் அங்கு சென்றடைந்த பிறகுதான்

அம்மக்கள் முஸ்லிம்கள் வருவதை அறிந்து இங்குமங்கும் ஓடிச் சென்று விட்டார்கள் என்று தெரிய வந்தது. ஆயினும் பெருமானார் (ஸல்) அவர்கள் அங்கு சில நாட்கள் வரை தங்கி இருந்தார்கள். அந்த குழப்பவாதிகளைப் பற்றி ஏதாவது தகவல் தெரிய வருகிறதா என்று அறிய சிறு சிறு படைப்பிரிவுகளை இங்குமங்கும் அனுப்பி வைத்தார்கள். ஆனால் அம்மக்கள் எப்படி மாயமாகிப் போனார்கள் என்றால் அவர்களைப் பற்றிய எந்த துப்பும் கிடைக்கவில்லை.

**தூமத்துல் ஜந்தலிலிருந்து திரும்பி வந்ததைப் பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது;** பெருமானார் (ஸல்) அவர்கள் அங்கு மூன்று நாட்கள் தங்கி இருந்த பிறகு அனைத்து படையினரையும் அழைத்துக் கொண்டு மதீனாவை நோக்கி புறப்பட்டார்கள். ரபீவுஸ் ஸானீ 20 ஆம் தேதியில் மதீனா வந்தடைந்தார்கள். தூமத்துல் ஜந்தல் படையெடுப்பு தம் விளைவைப் பொறுத்தவரை மிகவும் பயனுள்ளதாக நிரூபணமானது. இந்த படையெடுப்பின் மூலமாக அனைத்து பகுதிகளை பற்றியும் தெரிய முடிந்தது. அனைத்து இடங்களைப் பற்றி அறியவும் வேண்டும்; அத்துடன் அநீதியும் நீக்கப்பட வேண்டும் என்பதே இதன் நோக்கமாக இருந்தது.

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:* துஆக்களின் பக்கம் மீண்டும் கவனமூட்ட விரும்புகிறேன். அல்லாஹ் உலகில் பொது அமைதியை நிலைபெறச் செய்வதற்காக துஆ செய்யுங்கள். அந்த அமைதியை நிலைநாட்டுவதற்காக பெருமானார் (ஸல்) அவர்கள் தம் காலத்திலும் முயற்சி செய்தார்கள். இது அன்னாருடைய வருகையின் நோக்கமாக இருந்தது; இதுவே இஸ்லாமிய போதனையின் நோக்கமாக உள்ளது. இந்த அனைத்தும் அல்லாஹ்வுடைய சிறப்பான அருளினால் மட்டுமே நிகழ முடியும்! இதற்காக துஆக்களின் தேவை உள்ளது.

வெளிப்படையில் இப்போது உலக வாதிகள் தம்மைத்தாமே காயப்படுத்திக் கொள்வதை விட்டு விலக மாட்டார்கள் என்பது போல் தெரிகிறது. வெளிப்படையான முறையில் அமைதிக்கான சூழல் தென்படவில்லை.

இரண்டாவது விஷயம், இந்த மேற்கத்திய நாடுகளில் இப்பொழுது முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகளும் மிகவும் தீவிரமாகியுள்ளன; அது இன்னும் தீவிரமாகும் என்றே தோன்றுகிறது. இதற்காகவும், முஸ்லிம்கள் தாம் எஞ்சி இருப்பதற்காகவும் வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும். அவர்கள் ஒன்றுபட வேண்டும். தம் நிலைகளை மேம்படுத்த வேண்டும். அல்லாஹ் அவர்களை புரியக்கூடியவர்களாக ஆக்குவானாக!

முஸ்லிம் நாடுகளில், சூடான் போன்றவற்றில் முஸ்லிம்களே முஸ்லிம்கள் மீது அநீதி இழைத்து வருகிறார்கள். அதற்காகவும் துஆ செய்யுங்கள். இவர்கள் மார்க்கத்தின் நோக்கத்தை மறந்து விட்டு தம் சகோதரர்களையே கொல்கிறார்கள். இதன் காரணமாகத்தான் அந்நியர்களும் முஸ்லிம்கள் மீது அநீதியிழைக்கிறார்கள். நாடு மற்றும் சமுதாயத்திற்கு தொண்டாற்றக் கூடியவர்களாகவும் அமைதியை ஏற்படுத்தக் கூடியவர்களாகவும் அல்லாஹ் இவர்களை ஆக்குவானாக!

اَلْحَمْدُ لِلّٰہِ نَحْمَدُہٗ وَنَسْتَعِیْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِہٖ وَنَتَوَکَّلُ عَلَیْہِ وَنَعُوْذُ بِاللّٰہِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَیِّئَاتِ اَعْمَالِنَا مَنْ یَّھْدِہِ اللّٰہُ فَلَا مُضِلَّ لَہٗ وَمَنْ یُّضْلِلْہُ فَلَا ھَادِیَ لَہٗ وَنَشْھَدُ اَنْ لَّآ اِلٰہَ اِلَّا اللّٰہُ وَنَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ وَرَسُوْلُہٗ، عِبَادَ اللّٰہِ رَحِمَکُمُ اللّٰہُ اِنَّ اللّٰہَ یَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِیْتَآءِ ذِی الْقُرْبٰی وَیَنْھٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْکَرِ وَالْبَغْیِ یَعِظُکُمْ لَعَلَّکُمْ تَذَکَّرُوْنَ اُذْکُرُوا اللّٰہَ یَذْکُرْکُمْ وَادْعُوْہُ یَسْتَجِبْ لَکُمْ وَلَذِکْرُ اللّٰہِ اَکْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**